## கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) பொறுப்பு அவர்களின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர்: திரு.ப.சுரேஷ்

ந.க.26456/2012/அ4 நாள்:18.07.2017

ஏவிளம்பி, ஆடி-02, தி.ஆ.2048

| | |
|---|---|
| பொருள் : | பொதுப்பணி – தமிழ்நாடு அமைச்சுப் பணி வகைபாடு-17 – கோயம்புத்தூர் மாவட்ட வருவாய் அலகு – சார் ஆட்சியர் அலுவலகம், பொள்ளாச்சி - சுருக்கெழுத்து-தட்டச்சர் நிலை-III - திருமதி. செ.குமாரிதேவி – பணி வரன்முறைப்படுத்தி உத்தரவிடப்படுகிறது |
| பார்வை : | 1) தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணி விதிகள், விதி 23<br>2) தமிழ்நாடு அமைச்சுப் பணி விதிகள், விதி 32<br>3) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய கடிதம் எண்.8059/பிஎஸ்டி-பி3/2014, நாள்:21.12.2014<br>4) கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.26456/2012/அ4, நாள்:28.02.2015<br>5) பொள்ளாச்சி சார் ஆட்சியரின் கடிதம் ந.க.1202/2017/அ4, நாள்:08.06.2017<br>6) திருமதி.செ.குமாரிதேவி பணிப்பதிவேடு |

**உத்தரவு:**

கோயம்புத்தூர் மாவட்ட வருவாய் அலகில், பொள்ளாச்சி சார் ஆட்சியர் அலுவலகத்தில் பணிபுரியும் திருமதி.செ.குமாரிதேவி என்பவரது பணியை சுருக்கெழுத்து-தட்டச்சர் நிலை-IIIஇல் 21.04.2015 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தி, மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் ஈராண்டுகள் தகுதிகாண் பருவத்தில் வைத்து உத்தரவிடப்படுகிறது.

2. பார்வை 3இல் காணும் தேர்வாணைய கடிதத்தின் பத்தி 5இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, இப்பணி வரன்முறையானது தொகுதி-IV 2013-2014ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய தெரிவிற்கு எதிராக சென்னை உயர்நீதி மன்றம்/சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் நிலுவையிலுள்ள வழக்குகளின் தீர்ப்பிற்கு உட்பட்டது.

3. இவ்வுத்தரவு தொடர்பாக தனியரது பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அலுவலகத் தலைவர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

ஒம்/-ப.சுரேஷ்
மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர் (பொது)
கோயம்புத்தூர்.

**பெறுநர்:**
திருமதி.செ.குமாரிதேவி, (தொடர்புடைய அலுவலகத் தலைவர் மூலமாக)
சுருக்கெழுத்து-தட்டச்சர் நிலை-III,
சார் ஆட்சியர் அலுவலகம்,
பொள்ளாச்சி.
படி: சார் ஆட்சியர், பொள்ளாச்சி.

/உத்தரவுப்படி/

அலுவலக மேலாளர் (பொது)